

ஓலை 181| ஓசை 304| ஜூலை 2026

# அகர முதல இலக்கியப் பேரவை



## 'உவமைக் கவிஞர்' சுரதா

# கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்**

## பொருள்

**எல்லா உயிர்களும் பிறப்பால் சமமானவை;
அவரவர் செய்யும் செயல்களே
உயர்வு–தாழ்வை நிர்ணயிக்கின்றன.**

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.

**அகர முதல இலக்கியப் பேரவை**

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## கலைமிளிரும் கன்னித்தமிழ்!

பாவகை : அறுசீர் மண்டிலம்

கலைகள் எத்தனை கலைகளடா
கண்ட றிந்தவன் தமிழனடா!
வலைக்கண் போன்று வகைவகையாய்
வடித்தக் கலைகள் ஆயிரமாம்;
நிலையாய் வையம் எங்கெங்கும்
நிலைத்தக் கலைகள் மிளிர்ந்திடவே
கலைகள் தலையாய் நின்றுவென்ற
கன்னித் தமிழே வாழியவே!




புற்றில் பாம்பு புகுந்துகொண்டு
புற்றெ றும்பைப் புசித்தல்போல்;
கற்கா, கற்ற யாவருமே
கலைகள் அருமைப் புரியாமல்
கற்பு நெறியும் இலாபரத்தை
கணக்காய்க் கன்னித் தமிழ்க்கலைகள்
விற்ற நிலைபோல் மறந்திடினும்
மிளிரும் கன்னித் தமிழ்க்கலையே!




ஊனில் உறைந்து, உயிர்க்கின்ற
உயிரில் கலந்து ஒளிர்பவளே!
வானில் பறந்து வையமெங்கும்
வளமண் நிறைந்து மிளிர்பவளே!
நாநில மெங்கும் பரந்திருந்து
நனைந்து நெருப்பில் செழுத்தவளே!
வானின் மழையில் கிளைத்தகலை
மிளிரும் கன்னித் தமிழ்வாழி!

**நெருப்பலைப் பாவலர் இராம. இளங்கோவன்**


## பாவகை : எட்டடி பஃறொடை வெண்பா

இலக்கினை நோக்கி
இதமாய்ப் பயணி.
கலக்கம் புகுந்தால்
கடமை தவறும்.

அலவலை நீக்கியே
அஞ்சாமல் செய்வாய்
பலமாய் மனதினில்
பண்பை வளர்ப்பாய்

அலவுதல் உன்னை
அடிமையாய் ஆக்கும்.
உலவிடும் தேனீயாய்
உண்ணி நகர்வாய்

தலசமாய் மின்னத்
தரமாய் முயல
அலங்கல் சுடலாம் அறி.



கவிஞர் செ. கலைவாணி



அகர முதல

# தன்கையே தனக்கு உதவி



காத்திருக்கும் கரங்களுக்கு
காலமுவந்து கைநீட்டுமோ?
உழைக்கத் தயங்கும் ஊதாரிகள்
உண்ணலாமோ?

பிறர்தோளில் ஏறிநிற்பது
பெருமையென எண்ணாதே
பிறர்தரும் உதவி
பிழையிலேப் போய்முடியும்

தன்கையே வளைந்துத்
தனக்குதவிட வெற்றியாகும்
தன்தோளைத் தான்சுமந்து
தரணிகாணின் அதுசாதனை

வியர்வைத் துளிகளே
வெற்றியின் விதைகளாய்
தன்னம்பிக்கையேச் சரித்திரத்
தலைநிமிர்த்தும் தோள்களாய்

பிறர்நிழலைத் தேடாது
பிணைநீயாய் உன்விதையாகு
தடைகள் வந்தாலும்
தளராதப் பாதமாகு

தன்கையே தனக்குதவி
தலைமுறைக்கும் இதைபோதி
விழுந்தே னேயென
வீணாய் அழாதே

எழுந்திடுவேன் என்று
இறக்கைகள் நீட்டு
நிழல்தேடி நிற்கும் நிலையல்ல நீ

வெயில்வென்று வளர்ந்து விரிந்த
ஆலமரமென துயிலுரிக்கும் மடமைகளிடம்
துணிந்துநீ பறையிடு!

கவிஞர் ஜமுனா ஜெகன், நாகர்கோவில்

# தர்மம்

நேரடியாய்த் தொட்டிக்குள்
விதை போட்டனரோ.
நாற்றுச்செடியைத் தொட்டிக்குள்
நட்டு வைத்தனரோ.

எதுவாயினும்
இப்போது செடியிருக்கிறது
தொட்டிக்குள்.

ஆணிவேரை ஆழஊன்றி
கிளைவேர்களைக் கிளைப்பரப்பும்
அந்தக் காலம் வரை
தொட்டிக்குள் வரையறுக்கப்பட்ட
வாழ்வென்றாகிறது செடிக்கு.

செடியின் பயனை
நீ அடையவும்.
அதன் வம்சத்தை
அது விஸ்திகரிக்கவும்.

மண்தொட்டியை உடைத்தெரிந்து
நீரைத்தேடி உயிரின் ஆணிவேரை
மண்ணில் ஆழயிறக்குதல் தானே
தர்மம்!



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# ஒன்றே குலம்



சாதிகளின் சாக்கடையில்
மனிதம் ஆனந்தமாய்
மதங்களின் மந்தையில்
மனிதன் ஆடுகளாய்

உயர்ந்தவன் தாழ்ந்தவன்
இரண்டே சாதிகள்
இங்கே சமூகத்தின்
வேதனை அடையாளங்களாய்

சாதிகளின் சட்டைப்பையில்
மதங்கள் பாதுகாப்பாய்
சாதி சங்கங்கள் தெருவெங்கும்
தேடப்படும் முகங்களாய்

என்னுடைய சாதிக்காரன்
இந்த வார்த்தைகள்
பல்வேறு சமூகத்தின்
தேசிய கீதங்களாய்

ஒன்றே குலம் இந்த
சொற்கள் இன்று வரை
தெளிவில்லா வாக்கியங்களாய்

ஒருவனே தேவன்
இதுவும் உண்மையான
பொய்களாய்

கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# அவள்

அன்று முதல் இன்று வரை
எப்போதுமே "அவள்" என்றாலே
ஒரு அலட்சியம்தான் அவனுக்கு!
தன்னைப் புரிந்துகொள் என்று கூறும் அவன்,
அவளைப் புரிந்துகொள்ள ஒருநாளும் முயன்றதில்லை!

அனைவருக்கும் முக்கியத்துவம் அளிக்கும்
அவனுக்கு, அவள் மட்டும்
எப்போதுமே இரண்டாம் பட்சம்தான்!

இல்லத்தில் யாரேனும் தவறிழைத்தால்
தண்டனை என்னவோ அவளுக்கே!
ஏனெனில் அவன் பார்வையில்
அவள் என்றுமே ஒரு குற்றவாளிதான்!

அவனுடைய கண்களில்
என்றுமே அவள் ஒரு
நாடகக்காரி, அதிர்ஷ்டமில்லாதவள்!

ஆம்! அவள் நாடகக்காரிதான்
அவனுக்காகப் போராடியதால்!
ஆம்! அவள் அதிர்ஷ்டமில்லாதவள்தான்
அவனுக்காக அனைத்தையும் இழந்ததால்!

பண்டிகை நாட்களிலும் உடல்நலமற்ற நாட்களிலும்,
"இது நம் குடும்பம்; நீதான் அனைத்தையும்
பார்க்க வேண்டும்" என்று கூறும் அவன்,
இது தவறு என்று சுட்டிக்காட்டும்போது மட்டும்
அவள் "மற்றவள்" ஆகிவிடுகிறாள்!

இன்னும் எத்தனை காலம்தான் வேண்டும்?
அனைத்தையும் விட்டுவிட்டு அவனுக்காக வந்தவள்
அவள்தான் என்பதை அவன் உணர்வதற்கு!



கவிஞர் தி. கமலவேணி, மானியம் ஆடூர்


தேவனின் ஆலயத்தில்
தேவதைகளின் மணியோசை.
கோயில் வளாகத்தில்
கோபுரங்களின் வாசம்.

மலையுச்சியில் காத்திருக்கும்
மன்னவனின் அழைப்போ?
விண்ணவனின் சந்நிதியில்
விநியோகம் அமைதியோ?

அகப் பொருளில்
அமைதியின் பெருக்கு.
எஞ்சி இருக்கும்
என்னவனின் எழிலோசை.

எதிரும் புதிருமாய்
எல்லைகளில்லா உலகினிலே.
கண்களில் தீபம்
கரைந்தோடும் அருளோசை.

அமலனின் முகமலர
அடிபாதம் வணங்கிடு.
ஆலயம் தேடுவது
ஆண்டவனையே ஆள்வதல்லவா?




கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

பிழை இழைத்த ஆரூர்த் தளிர்
பிழைக்க வழித் தேடும் கிள்ளி
பிழை பெருகத் தளரும் நெஞ்சம்
பிழை அறுக்கும் வேல்.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ்நாடு

# கண்ணான கண்மணிக்கு



தாய்ப்பாசம் பொங்குதடா
நெஞ்சுக்குள்ளே ஈரமாச்சுடா!
தாய்ப்பால் தந்துதான்
பசியைத்தான் போக்குவேனடா!

நோய்நொடி இல்லாமல்
நூறுவயது வாழணும்!
பெற்ற மனதுதான்
பெருமையை அடைந்திடணும்!

தாலேலோ பாடுறேன்
தங்கமே கண்ணுறங்கு!
ஆராரோ ஆரிரரோ தாலாட்டிலே
அன்னமே நீயுறங்கு!

காலடி மண்ணெடுத்துச்
சுற்றித்தான் போடுவேனே!
நிம்மதியாய் நீதூங்கிடு
உன்னோடு நானிருக்கேனே!

அழாமல் இருக்கத்தான்
அமுதம் ஊட்டிடுவேனே!
அழகுச் செல்லமே
அறிவான என் மகனே!

உன்னுடைய குறும்புத்தனம்
குதூகலம் தருதேடா!
கிளிப் பேச்சைக் கேட்கையிலே
ஆனந்தம் ஆகுதடா!

கண்ணான கண்மணிக்குக்
கண்ணுபட்டுப் போகும் என்று
கன்னத்திலே கரும்புள்ளி
கவனமாய் வைத்தேனே!

கவிஞர் ஒப. ஒவங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# ஓய்வு தேவையா?



பாடும் குயிலுக்கு ஏது ஓய்வு?
ஆடும் மயிலுக்கு ஏது ஓய்வு?
ஓடும் நதிக்கு ஏது ஓய்வு?
தேடும் மதிக்கு ஏது ஓய்வு?
மனிதா, உனக்கு ஏன் ஓய்வு?
மனதிற்குள் எதற்கு தேய்வு?
தேவையா உனக்கு சாய்வு?

வானம் மழைக்கு ஓய்வு வழங்கினால்,
பூமி வறண்டு புண்ணாகும்.
காற்றின் பயணத்திற்கு
திசைகள் பயணச்சீட்டு வழங்காது போனால்,
இயற்கையின் சுவாசக்குழாய் சுருங்கிவிடும்.

அரைத்துக் கொண்டே இருந்தால்தான்
சந்தனம் மணக்கும்.
ஓய்வைக் குறைத்து உழைத்துக் கொண்டே
இருந்தால்தான் வாழ்க்கை மணக்கும்.

அலைகள் ஓய்வெடுத்தால்
கடலுக்கு அழகில்லை.
கலைகள் ஓய்வெடுத்தால்
கவிதைகளுக்கு அழகில்லை.
சிலைகள் ஓய்வெடுத்தால்
காண்பதற்கு அழகில்லை.

மரங்களே மன்றாடி
மனுப் போட்டாலும்,
காற்று கருணை காட்டுவதில்லை.
மரங்களுக்கு ஓய்வும் தருவதில்லை.

உயிரும் மெய்யும் ஓய்வெடுத்தால்,
உயிர்மெய் எப்படி உருவாகும்?

ஆணும் பெண்ணும் ஓய்வெடுத்தால்,
மழலை எப்படி கருவாகும்?
சரி, எப்போது ஓய்வு எடுப்பது?
கோபம் வரும் போது
வார்த்தைகளுக்கு ஓய்வு கொடுங்கள்.

பிறகு
அன்பு வெள்ளத்திற்கு
ஏது ஓய்வு?

கவிஞர் முனைவர் அ. ச. மு. முனியாண்டி

# நீயின்றி நானேது

எனதுயிரே எனதுயிரே எனை மறந்து
மண்ணில் இருந்து மறைந்ததேனோ
உனது இதழ்கடையோரம்
மிளிரும் புன்னகையை காணாது தவிக்கிறேனே.

இமைகள் மூட மறுக்கிறதே நீயில்லாமல்
உயிர்வதை நிகழ்கிறதே என் உள்ளமதில்.
ஊராண்ட மகராசா உலகை ஆள போனீரோ.
ஒரு துளி செய்தி கூட உரைக்காமல்
போனதேனோ.

கண்ணாடி பூக்களாய் மண்மீது
விழுந்து உடைந்த மழைத்துளி போல்
கண் மூடி திறக்கும் முன் காணாமல் போனதேனோ.

எங்கெங்கோ நினைவுகள் இதயமதில் உலா வர
நினைவை கொடுத்தவரோ
ஆகாயத்தில் நட்சத்திரமாய் போனதேனோ

உதிர்ந்து போனது
எனது கனவுகள் மட்டும் அல்ல.
என் கனவின் நாயகனும்.
நீயின்றி என் கனவெல்லாம் கானல் நீரே.



கவிஞர் சுமதி தசரதன், திருவான்மியூர் (சென்னை)

# வளைந்து நெளிந்து செல்வதால் அல்ல

பெண்ணும் நதியும் ஒன்றுதான்;
வளைந்து நெளிந்து செல்வதால் அல்ல.

யாரும் கடந்திடாத
தூரங்களையும் துயரங்களையும்
அமைதியாகக் கடந்து செல்வதால்!

செரிக்க முடியாத
கற்களையும் முட்களையும்
தனக்குள் சேர்த்துக் கொள்வதால்!

அடங்க மறுக்கும்
காரிருளையும் கசப்பையும்
மௌனமாய் அடக்கிக் கொள்வதால்!

பெண்ணும் நதியும் ஒன்றுதான்;
வளைந்து நெளிந்து செல்வதால் அல்ல.



கவிஞர் ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)


கனவுகள் நிறைந்த நாளை
நமக்காகக் காத்திருக்கிறது.
கண்ணில் ஒளி,
கையில் புத்தகம்,
உள்ளத்தில் துணிவு இருக்கிறது.

போதை எனும் இருள்
வாழ்க்கையை விழுங்கும் முன்னே,
விழித்தெழு தோழா,
நம் எதிர்காலம் நம் கையிலே.

போதை நமக்குச் சொந்தமில்லை;
அது அழிவின் பாதை.
"நாளை நமது" என்று உலகம்
சொல்லும் நேரம் இதுதானே!

வேண்டாம் மயக்கம்,
வேண்டாம் மரண வலை.
நாம் வாழ்வோம் வீரமாய்

நாளை நமது!
போதை நமதல்ல!





கவிஞர் ஏ. எம். முர்ஷிதா, இலங்கை

# ஒரு கணிதை ஆசிரியையின் பணி நிறைவு

தோளில் தொங்கும் பையை கீழே இறக்கியாச்சு!
நினைவுகளை இறக்க மனமின்றி;
மனம் முழுவதும் கூட்டலும், கழித்தலும்,
பெருக்கலும், வகுத்தலும்.
கற்பித்த பாட்டியின் முகம் வந்து போகிறது.




நாடார் கடையில் மீதிச் சில்லறைகளை
சிறிது அதிகமாகவோ, சிறிது குறைவாகவோ
கொடுத்து எண்ணச் சொன்ன
அண்ணாச்சி மாணிக்கத்தின்
பற்கள் காட்டிய சிரிப்பு!

நாலும் இரண்டும் ஆறு!
மூணும் மூணும் ஆறு!
ஐந்தும் ஒண்ணும் ஆறு!
விந்தையிலும் விந்தை!
எப்படி ஆனது என்ற வித்தை!
எண் இலக்கியத்தின் முதல் வித்தே
என்னை கணித மாணவியாக ஆக்கியது!

பின்னாட்களின் நினைவுகளில்
தாமஸ் சாரும், சடகோபன் சாரும்,
பேராசிரியர் ஜகந்நாதனும்!
கணிதத் தேற்றங்களிலும்,
வடிவியல் கணக்குகளிலும்,
தொகையீட்டுக் கணக்குகளிலும்,
வகை நுண்கணிதத்திலும்,
முக்கோணவியலிலும் தேற்றிவிட்டனர்!
கணக்கு என்னை பிணக்கமின்றி
அணுக்கமாய் அணைத்துக் கொண்டது!

கணக்கு என்றாலே மரணப் பயத்தில் நடுங்கி,
ஆமணக்கின் கைப்பை உணரும் மாணாக்கர்க்கு,
கணக்கை வாண்மையாகப் புகட்டும் ஆசிரியை ஆனது,
என் ஆசான்கள் எனக்குள் இட்ட தன்னம்பிக்கை முளை!

இன்றும் எனது மாணவச் செல்வங்கள் அறியார் என் பெயரை!
"மேத்ஸ் மேம்" என்றே அறியப்படுவதில் இன்பமே!
இனி நானும் என் முன்வீட்டுத் தாழ்வாரமும்
காத்திருக்கும்; இளம் குழந்தைகளுக்காக!

கையில் சாக்பீசும், மனதில் கற்பிக்கும் உந்துதலுடனும்!
எனக்கு பணி அயர்வு இல்லை! பணி நுகர்வு மட்டுமே!
என் வாழ் முற்றும் வரை.

கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# நான் யார் தெரியுமா?



புல்லாய் எண்ணி என்னைச் செருக்கலாம்;
ஒரு துளி நீரில் துளிர்ப்பேன்.
கல்லாய் எண்ணி என்னை உடைக்கலாம்;
நானே என்னைச் செதுக்கிக் கொள்வேன்.

வழிமறித்து என்னைத் தடுக்கலாம்;
வீழ்ந்த இடத்திலும் ஓர்
நினைவுச் சின்னம் நிறுவுவேன்.

தூக்கி எறிந்து பாருங்கள்;
வீசப்பட்ட இடத்திலோர்
தருவாகி நிழல் தருவேன்.

தூக்கிப் போட்டு உடைத்துப் பாருங்கள்;
ஒவ்வொரு சிதிலங்களும்
ஒவ்வொரு சாதனை படைக்கும்.

அழுக்காறு சுமந்த
அற்பப் பிறவிகளே,
வீழ்வேனென்றா நினைத்தீர்கள்?

உங்கள் அடக்குமுறைகளும்,
ஒடுக்குமுறைகளும் என்னைப்
பேராறாய்ப் பெருக்கெடுத்தோடச் செய்யும்
பேரகழ்வுகள்தான்.

என்னை நிறுத்த
உங்களால் என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள்.
எதற்கும் அசரா அதிசயப் பிறவி நான்.

உங்களைக் கண்டுகொள்ளாமலே
காட்டாறாய் கடந்து செல்வேன்.

கவிஞர் சம்மாந்துறை மஷூறா, மருதமுனை, (இலங்கை)

# விழிகள் காணாத அருள்கள்

மெதுமெதுவாய் மேனி தெரியாமல்
விட்டிழுக்கும் மூச்சொலி.

நரம்பு மண்டலத்தை
நகர்த்தாமல் இழுத்துப் பிடிக்கும்
இதயத் துடிப்பு.

நாவுக்கடங்காது மடை திறக்கும்
அறுசுவைகளை ருசிக்கும் இந்த உடல்.

களைத்த உடல்
கண்டு கண்ணயர்ந்து
கனவு காணும் விழிகள்.

ஆயிரமாயிரம் வதனங்களைக்
கடக்கும் இந்தக்
கண்களுக்குள் நுழையும்
பிடித்த உறவுகள்.

கரம் பிடித்து
நடக்கத் தெரியாத
நாட்களில் நேரமறியாது
பேசிய மழலை மொழி.

கண்ணீரைக் கட்டி வைத்து
புன்னகையைத்
துளிர்க்க வைக்கும் மனது.

வலிகளை மறந்து
வார்த்தைகளை உதிர்த்து விழுங்கும்
நிறைவின் பொழுதுகள் யாவுமே
விழிகள் காணாத அருள்கள்.



கவிஞர் சேஹு மொஹம்மது பெனாஸிரா, முஸ்லிம் ஹல்மில்லாவ

# கண்ணின் வழி நீர்



வாழ்க்கைப் பாடம் கற்க வேண்டி,
ஏணி எட்டிப் பார்க்கும் தூரம்.
கதவுகள் மூட,
வெளிச்சம் தேடும் தருணம்.

கண்கள் ஏக்கம் சொல்லத் தவறில்லை;
இல்லை, ஒரு வார்த்தை கூற!
காகம் கரையும் பொழுது
விடியும் நேரம்.

மானுட வாழ்வில்
கனவுகள் நிரம்ப,
வறுமை வந்து அதையும் சூழ,

சோகம் நிறைந்த ஓட்டை வீடு;
நீர் ஒழுகும் தருணம் கண்ணிலா?
காலங்கள் பதில் சொல்லும்
என நினைக்கிறான்.

அவனுக்குப் பதில் சொல்ல
துணை இல்லை என்னும் பிரிவால்,

உன்னை வேண்டி
நீ என்னும் போதும்,
அனைத்தும் பறந்து
கண்கள் வழியுமாம்.

ஆறுதல் கூறும்
அதுவே அழுகையும் வேண்டுமாம்.
சந்தோஷம்கூட செய்ய வழியின்றி
கட்டி அழுதாம்.

இதுவும் கண்ணீர் விடும் நீரா?
இல்லை, ஆனந்தம் கூறும் பரிசா?

ஏக்கம்தான் வெளியிடும் கண்ணீர்;
தனிமை பெரும் ஆறுதலாக
உன்னில் என்றும் நிலைக்கும்
அழியா பாக்கியம்.

அதையும் வாழ்வில் அழிக்காதே!
இதுவும் வாழ்வில் ஒரு துளியே!

கவிஞர் ஸபா நளீர், கண்டி, இலங்கை

# என் குரல் பூமியில் ஒலித்த நாள்



நான் பிறந்த நாளன்று
இந்த நாளிற்காக ஏங்கி இருக்கும் அந்த
முகத்தைத் தேடினேன்.

என்னை ஈன்று
எடுத்த அந்தத் தாயின் வலியைக்
கண்டு கண் கலங்கிய பிறகு,

அவளின் அரவணைப்பில்
மூழ்கிக் கிடந்தேன்.

எண்ண முடியாத
நட்சத்திரங்களைக் காட்டிலும்,
அளவிட இயலாத
வானத்தைப் போலவும்,

அந்த உயிரின் அன்பு
மிக உயர்ந்ததாக
மகிழப்படுகிறது.

நாள்தோறும்
கண் இமை மூடாமல்
பாதுகாத்து வருகின்ற

எந்த ஒரு உறவுக்கும்
இணையாகாமல்,
தனித்து நின்று
பலம் கொடுக்கும் பெண்.

கண்ணும் கருத்தும்போல்
பேணுகின்ற அவளின்
கற்பனை உலகில்
என்றும் நான்.

கவிஞர் மா. மோனிஷா

# காலப்பெருவெளியில் கசியும் கண்ணீர்

வார்த்தைகள் எல்லாம் வறண்டு விட்டன.
மௌனங்கள் எல்லாம் சுமையாகி விட்டன.
பதவிகள் கைகூடும் வரை
எண்ணிலடங்கா போராட்டங்கள் கடந்து விட்டன.
இனியும் வேண்டாம் என்றே,
வாழ்க்கையே போராட்டமாகி விட்டது.

சிறு விடுமுறையேனும் கிடைத்திட்டால்,
குடும்பங்களோடு கொஞ்சிக் குழாவி,
தொலைந்து போன நிம்மதியைப் பெறுவதாயிற்று.

கைகளில் சேரா கனவுகளைப் புதைத்து,
மீண்டும் மீண்டும் மீட்டெடுத்துக் கொள்ள
மனமும் தினந்தோறும் தவிக்கிறது.
மீளவும் முடியாமல், வெல்லவும் முடியாமல்.

காலப்பெருவெளியில் கசியும்
கண்ணீரோடு காலங்கள் மாய்ந்தாலும்,
சிறகடிக்கக் காத்திருக்கும்
கனவுகளின் சிறகுகளை வெட்டிவிடாதே.

மீண்டும் வேரோடு
துயரம் தாண்டி எழு.
கனவுகளும் இலட்சியங்களும்
உன் கை சேர்ந்தே தீரும்.



கவிஞர் முஹம்மட் நாபி ஷேபா கானம், பாலமுனை

# தொலைந்தும் மீண்டேன்

நிலவின் ஒளியில்,
நீல வானின் நிறத்தில்,
பறவையின் இறகில்,
பட்டாம்பூச்சியின் சிறகில்,
கடலலையின் ஓசையில்,
கரையின் நுரையில்,
அன்பின் அணைப்பில்,
புல்லின் தளிரில்,
புன்னகையின் அழகில்,
மலைச்சாரல் துளியில்,
மழலையின் மொழியில்,
நட்பின் அன்பில்,
நந்தவனத்தின் வனப்பில்,
தனிமையின் நிசப்தத்தில்,
தென்றலின் ஸ்பரிசத்தில்,



எப்போதும்
என்னை நானே
விரும்பித்
தொலைத்துக்
கொண்டிருக்கிறேன்.

இப்படியே
இதுவும்
பேராறுதலாய்.

உச்சி முகர்ந்து,
முத்தமிட்டு,
நாளைய நம்பிக்கையாய்
மனதிற்கு
ஒத்தடம் தருகிறது
இயற்கைத் தாய்.

கவிஞர் முபீதா அமீன், அக்கரைப்பற்று



தமிழர்களின் கலாச்சாரத்தின்
முக்கியமானதொரு பண்பிது.

நமது வரலாற்றுப் பெட்டகமான
சங்க இலக்கியங்கள்

இதனைத் தெளிவுபடுத்துகின்றன;
பற்பல பாடல்களைக் காணலாம்.

வள்ளுவர் குறளில் அறத்துப்பால்,
இல்லறவியல் பிரிவு ஒன்பதில்

இப்பண்பின் சிறப்பையும் மாண்பையும்
தடையின்றிப் போற்றிடுவார்.

**"அல்லிலாயினும் விருந்துவரின்..."**
என நற்றிணைப் பாடல்களும்,

**"குரல் உணங்கு விதைத்தினை..."**
எனப் புறநானூற்றுப் பாடல்களும்,

விருந்தினர் உபசரிப்பின் உச்சத்தைக்
காட்டி, விருந்தோம்பலை ஏற்றுகின்றன.

இப்பண்பு இக்காலத்தில் நசுங்கி,
உருகிக் காணாமற் போய்விட்டது.

களைப்பாற்றும் வீட்டு திண்ணை,
அன்னசத்திரம் — அடிச்சுவடில்லை.

பசித்தோர்க்கு உணவூட்டல்,
ஈகைப் பண்புகள் மறைந்தன.

மனித வாழ்வில் மலர்ச்சி தரும்
மனிதாபிமானம் மீண்டும் வருமா?

கவிஞர் கி. சுப்பிரமணியன், அடையார்



அழைக்காமலேயே பின்தொடர்ந்தீர்கள்,
அவன் உதறிச் சென்றதை
ஒவ்வொன்றாகப் பொறுக்கிக்கொண்டே,
போதனை கேட்பதாகப் பொய்யுரைத்து

கேட்காமலேயே மழித்துக்கொண்டீர்கள்,
கொடுக்காமலேயே காவி தரித்துக்கொண்டீர்கள்,
போதகன் வழி போவதெனச் சொல்லி

யாவும் பொய்யெனத் துறந்து,
ஞானம் அன்பென உணர்ந்து
போனவர் வாக்கோ?
போதிக் கிளைக்குப் பொன் வேலியும்,
காவி உடைக்குக் கலாநிதியும்

அபயக்கரத்தால் கிள்ளிவிட்டு
ஆறுதல் சொல்கிறீர்.
காவி உடையால் கண்ணீர் துடைத்து,
அதிலும் இரத்த வாடை

மதுச் சுவை பழகிப்போன
சித்தார்த்தன் தோட்டத்துப் பட்டாம்பூச்சிகளே,
சிறு தேன் போதவில்லையா?

அவரைத் தேடுபவர்களுக்கு எதற்கு
உங்கள் வீட்டு முகவரி?
நேராகச் சென்றாலே அவனை
நெருங்கிவிடலாம்.
நெளிவுப் பாதை காட்டாதீர்.
வேண்டாம், திரும்பிவிடுங்கள்.

போதும் ஒரு பாதச்சுவடு


கவிஞர் யோகேந்திரன்பிரசாந், மண்டூர்

# சுந்தர காண்டம்

தமிழ்நாட்டின் வெள்ளித்திரையில் வைரமாய் மின்னுவோர்
தெரிந்தனர் பலரின் கண்களுக்கும் கலை உலகப் பிரமாக்களாய்.
தெரிந்தவர்களுள் ஒருவரே வியக்குநர் பாக்கியராஜ்; அவரைத்
தெரியாதென்பவர்கள் தமிழகத்தில் அரிதிலும் அரிதென்பேன்!

எந்த நடிகனுக்கும் நான் எப்போதும் ரசிகனில்லை எனினும்,
எந்நாளும் நான் உரைப்பதுண்டு கமலின் நடிப்பிற்கு
ரசிகன் நானென்று சொல்லிட வாய்ப்பு கிடைத்த இடமெல்லாம்;
ரசித்து நான் பார்த்தவர்களுள் இயக்குநர் பாக்கியராஜும் ஒருவரென்பேன்!

சுந்தர காண்டம் என்ற திரைப்படம் என்னைக் கவர்ந்தது. ஒன்றதற்கு
சுந்தரமான காரணமென்னவெனில், திரைப்படத்தின் நாயகன்
அடியேனைப் போலொரு தமிழாசிரியனென்பது மட்டுமின்றி,
அன்னவர் தமிழ் வகுப்பை எப்படித் தொடங்குவது என்பதை
அடியேனுக்கு மட்டுமின்றி அனைவருக்கும் போதித்திருப்பார்!



அடியேனுக்குப் பிடித்த நடிகையருள் பூர்ணிமா ஜெயராமும்
அடங்குவர்; அன்னவர் நடித்த திரைப்படங்களுள்
"கிளிஞ்சல்கள்" என்ற திரைப்படம் எந்தன் எண்ணங்களில் தந்திட்ட தாக்கம்
காலம் கடந்தும் வாழ்கிறது எந்தன் நெஞ்சில்; அது அப்படிக்
கிளைமாக்ஸ் காட்சியால் என்பேன், கலாரசிகர்களே!

திரைவானில் மின்னிய அவ்விரு நட்சத்திரங்களும்
திருமலைக்குமார்க்கு எட்டாக் கனிகள் என்றாலும்,
அடியேன் பணிசெய்த இலக்குமியாலைப் பள்ளியின் செயலரின்
அன்பு மகள் திருமணம் காணப் பள்ளியிலிருந்து கோவைக்கு
ஆசிரியர்கள் சென்றிருந்தபோது, அந்தத் தூரத்து நட்சத்திரங்கள் எங்கள்
அருகிலிருக்கக் கண்டு ஆனந்தம் மிகக் கொண்டு,
அறிமுகமாகி அன்னவரோடு புகைப்படம் எடுத்தும் மகிழ்ந்தோம்.

ஆர்வம் அதிகமாகி ஆட்டோகிராப் அவரிடம் வேண்டிட,
அன்போடு கையெழுத்திட்ட சுந்தர காண்டத்து நாயகனிடம்
அப்படம் தமிழாசானாம் என்னைக் கவர்ந்த விதம் யான் உரைத்திட,
"அப்படியா?" என்றவர் அடியேன் முகமதைத் திரும்பிப் பார்த்ததை மறவா.
அடியேன் அவர்க்குப் புகழஞ்சலியை இக்கவியால் செலுத்துகிறேனே!

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி

# அழியாத கோலங்கள்



விடியும் வரை காத்திருந்து
அருகில் இருந்த போது வெட்கப்பட்டு
தூரமாய் நகர்ந்ததும்
ஏக்கத்தோடு பார்ப்பதும்
நிறைய ஆசை இருந்தும்
ஒரு வார்த்தையும் பேசாமல்
மௌனமாய் கடக்கும் ஒவ்வொரு நொடியும்
எப்போதாவது எளிதாய்
"பிடிக்கும்" என்ற வார்த்தை
வந்துவிடாதா என்ற நப்பாசை மட்டும்
கொஞ்சமும் குறையாமல்,
இறுகிக்கொண்ட இதயத்தோடே
எப்போதும் கடந்து கழித்த நாட்கள் அத்தனையும்
பெரும் கனவாய் போய்விடாதா
என்ற ஏக்கம் மட்டும்
ஏன் இன்னும் துளிர்க்கிறது என்னுள்ளே?

சில உறவுகள் அப்படித்தான்
இருக்கும்போது அதன் அன்பும் அருமையும்
விளையாட்டுக் கணக்காய்,
நம்மையும் அறியாமல் விடைபெற்றுப் போகிறது!

அவை அழியாத கோலங்களாய்
ஆயுளுக்கும் தொடர்வதை
அறிந்தவரிடம் துளிர்க்கிறது
ஒரு துளி கண்ணீர்!

அந்த விடைபெற மறந்த
இறுகிய உறவுகளின்
இளகிய பக்கம்,
அந்த இரவுகளில் நனையும்
தலையணைக்கு மட்டுமே தெரியும்!

இருந்தும் சிலர் கனிவாய், தெளிவாய்,
சுகமாய் இருப்பதாய் காட்டுவதெல்லாம்
வலிகள் சுமந்த வருத்தம்
உள்ளே வாடிப் போயிருப்பதால்தானே?

படுத்ததும் உறங்கிடும்
பாக்கியம் பெற்றவர்கள்,
பூமியின் கணக்கில்
இங்கு போதாமையாய் இருப்பதே
அவர்கள் இழந்த நிம்மதிக்கு இன்னொரு சாட்சி!

சில கதைகள் பேசாமல் இருப்பதே
சபைக்கு வந்ததும்
சந்தி சிரிக்காமல் இருக்கவும்தான் எனச்
சல்லாபித்துச் சிரிக்கிறது
என்றும் தேயாத முழுநிலவு!

கவிஞர் யாழிசைசெல்வா, தேனி மாவட்டம்

# விழித்தெழும் வித்து

மண்ணின் மடியில்
மறைந்து கிடக்கும்
வண்ணக் கனவுகள்
வடிவம் பெறுமே!

விண்ணின் அமுதம்
துளியாய் விழவே,
மண்ணின் இதயம்
மகிழ்ந்து திறக்குமே!

இருளின் சிறையை
உடைத்தே எழுந்து,
கதிரவன் ஒளியில்
கவிதை பாடுமே!

வேர்கள் நிலத்தில்
விழுதுகள் பாய்ச்சிட,
பாரினில் பசுமைப்
பந்தல் இடுமே!

கிளைகள் தோறும்
மொட்டுகள் அரும்பி,
மலர்களின் புன்னகை
வாசம் தருமே!

காற்றின் இசையில்
இலைகள் நடனமிட,
இயற்கையின் நாடகம்
அரங்கேறுமே!

பறவையின் கீதம்
பாட்டாய் ஒலிக்க,
காலைப்பொழுதின்
கதவுகள் திறக்குமே!

சின்னஞ்சிறு வித்து
ஆலமரமாய்,
மண்ணுக்கு என்றும்
நிழலாய் நிற்குமே!

நம்பிக்கை விதைத்து
நாளும் உழைத்தால்,
மானுட வாழ்வும்
மாண்புற உயருமே!



கவிஞர் பாத்திமா ஹகீமா அமீனுதீன், ஓட்டமாவடி

நாற்காலி,
நான்கு கால்கள் உண்டு.
நலம் கொடுத்திடும் நாற்காலி,
அதிகாரம் செய்திடும் நாற்காலி,
ஆட்சி செய்பவரை இனங்காட்டிடும் நாற்காலி!
முதுமையில்,
தனிமையில்,
நம்மோடு பேசிடும் உறவு நாற்காலி!
நான்கு கால்களைக் கொண்டதால்,
நாற்காலி என்றும்
நாமம் சூடிக்கொண்டது!
மிருகங்களுக்கும் நான்கு கால்கள்,
ஏனோ...
இதற்கு இப்படிப் பெயர்?
பணியின் சிறப்பு,
பணிவின் பிறப்பு,
விருந்தின் இருக்கை,
ஓய்வின் இழுப்பு,
யாவற்றுக்கும் நாற்காலி!
பணி செய்பவர் விரும்பாத ஒன்று நாற்காலி!
உயிர் இல்லை,
உணர்வும் இல்லை,
பேசிட வாயில்லை,
இருந்தும் பயனில்லை,
மாயைக்குள் விழுந்த
மானிடர் வாழ்வில்
ஊமையாய் நான் இருப்பது!
உலகில் இன்று யாவருக்கும்
"போட்டி"
"நாற்காலி"
ஆர்ப்பாட்டம் இதற்குத்தான்!
நாற்காலி சொல்லும்
நாளைய நாளினை!!!



கவிஞர் ஜீவனிந்ரா கிங்ஸ்லி, கல்முனை,இலங்கை



எனக்குத் தெரிந்த
முதல் பெண்
அம்மா.

எல்லாப் பெண்களையும்
இப்போது "அம்மா" என்றே
அழைக்கிறேன்...
அம்மா இல்லாததால்.

கூடுகளைப் பார்க்கும் போதும்,
கன்றுக் குட்டிகளைக் கடக்கும் போதும்,
தவறாமல் நினைவில் வருகிறாய்,
அம்மா.

சிரிக்கச் சொல்கிறார்கள்;
உன்னைத்தான் நினைக்கிறேன்.

என் முதல் சிரிப்பை
நீதான் பார்த்திருப்பாய், அம்மா.

நான் பார்த்த
முதல் சிரிப்பும்
உன்னுடையதாகத்தான்
இருந்திருக்கும்.

இமைகளை மூடி
இதயத்தைத் திறந்தால்
உறக்கம்.

இமைகளைத் திறந்து
இதயத்தை மூடினால்
மௌனம்.

இமைகளையும்,
இதயத்தையும்
ஒரே நேரத்தில்
மூடிய பின்
திறந்தால்
காதல்.

இமைகளும்,
இதயமும்
மூடாமல்
திறந்தே இருந்தால்,
அதுதான்
தாயின் பாசம்.

கவிஞர் இரா. மதிராஜ், அலப்பட்சாக் கவுண்டன் புதூர்

அகர முதல

யாரெல்லாம் என் நிலைத்திருப்பைத்
தக்கவைக்க நினைக்கவில்லையோ,
அவர்களுக்கெல்லாம் என் நினைவிலிருந்து
வெளியேற கதவு திறந்தேயிருக்கிறது.

புரிந்துணர்வில்லாத எந்தவொரு உறவிடமிருந்தும்
விலகி நடக்கப் பழக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது
என் இதயம்.

பாவம், இந்த அப்பாவி இதயம்
எதைத்தான் கேட்கும்?
இவற்றை விடுத்து
இனி எதைத்தான் ஏற்கும்?

மனிதர்கள் எப்போதும்
ஒரே மாதிரி
உன்னைப் பார்க்கமாட்டார்கள்
எனக் கூச்சலிடுகிறது
அந்த உணர்வுகளின்
உள்குமுறல்.



கவிஞர் அதீனா அபூ உபைதா, ஓட்டமாவடி, இலங்கை

# அலைகள் எழுதும் கதை



யாரைத் தழுவ
இந்த அவசரமோ?

ஒன்றை ஒன்று
முந்துகின்றன
இந்த அலைகள்.

கரையின் அழகைக் காணவோ?
இல்லை,
அவளின் கால்தட அழகில்
கரையவோ?

முட்டி மோதி வந்து
கரை தழுவிய அலைகள்
எல்லாம்,

அவளின் பாதம் தொட்டதும்
கரை தாண்ட
மனமின்றி,
நுரையாய் கரையில்
மிதக்கின்றன.

சிதறிக் கிடக்கும்
கிளிஞ்சல்களும்,
சிப்பிகளின் முத்துக்களும்
ஏங்கிக் கிடக்கின்றன,

ஒரு முறையேனும்
அவளின் பாதம் தழுவி
முத்தமிட.

கவிஞர் க.கார்த்திகா மணிகண்டன், கோவை

மனதில் எத்தனையோ
குழப்பங்கள்.

யாரிடமும் சொல்ல முடியாமல்
தவித்தது உள்ளம்.

தனிமையை நாடினேன்;
மனம் சமாதானமாகவில்லை.

பேனாவைக் கையில் எடுத்தேன்.

மனதில் உள்ள குழப்பத்தை
பேனா கண்ணீராய் பொழிந்தது
காகிதத்தில்!

மனமோ
ஆறுதல் அடைந்தது!



கவிஞர் காஜா முகைதீன் பாத்திமா நிம்ஷியா, மூதூர் 01

மருத்துவப் பணியை மகத்தான பணியாய்
மருத்துவர் விரும்பியே மாற்றம் தந்தனர்
உயிரைக் காக்கும் உத்தமர் அவர்கள்
உதவியை நாடும் நலனைக் காக்க.

உலகம் போற்றிடும் உயிரைக் காப்பர்
உடலின் நலனை நாடியால் அறிந்து
எதிரிஉயிரி தந்து நோயை விரட்டி
மனிதன் வாழும் மனிதக் கடவுளே.

மருத்துவ மனையை மறப்பவர் எவரும்
மருந்தில்லாமல் வாழ இயற்கையை நாடி
உணவை அருந்தி உயிரைக் காக்க
உதவி தேடும் மருத்துவர் மட்டுமே.

ஆண்டிற்கு ஒருமுறை அவசியம் வந்திடும்
மருத்துவர் தினமும் ஜூலை முதல்நாள்.
மறக்காமல் வாழ்த்தி மகழ்ச்சி அடைவீர்
மருத்துவர் தினத்தை மனிதம் வாழ்த்தும்.



கவிஞர் முனைவர். இரவி சீனுவாசன், உடுமலைப்பேட்டை

# உதிர்ந்த இலையின் மௌனம்



பேசுவதற்கு ஆயிரம் கதைகள் இருந்தும்,
கொட்டித் தீர்க்க அளவில்லா வலிகள் இருந்தும்,

வார்த்தைகள் ஊனமாகி, மொழிகளின்றி
மௌனக் கடலில் அவள் தவிப்பதை
என்னவென்று சொல்வேன்?

நேற்றுவரை
வண்ணப் பட்டாம்பூச்சியாய் சிறகடித்தவள்,
இன்று சிறகுகளைப் பறிகொடுத்துவிட்டு,

கூடிழந்த புழுவாய்
தனக்குள்
சுருண்டு கொண்டாளோ என்னவோ!

வீணாய் அழுகிறாளே என்று
எனக்கே சில சமயம்
அவளைக் காண்கையில்
கோபம் வருவதுண்டு.

உதிர்வது உறுதி எனத் தெரிந்தும்,
மரத்தின் கிளையைப்
பிடிவாதமாய்ப் பற்றிக் கொண்டிருக்கும்

காய்ந்த இலையைப் போலத்தான்
அவளும் இருந்தாள்.

என் அறிவுரைகள் யாவும்
அவளெனும் பாறையில் முட்டி உடைந்தன.
ஆனால் இன்றோ,
அந்தப் பிடிவாதம் தளர்ந்துவிட்டது.

மரத்தின் மீதான பற்றுதலை
உதறித் தள்ளிவிட்டு,
காலத்திடம் தன்னை ஒப்படைத்து,
மௌனத்தில்
தன்னையே கரைத்துக் கொண்டாள்.

விழுந்த தரை சுட்டாலும்,
யதார்த்தம் உணர்ந்து
புன்னகைக்கப் பழகிவிட்டாள்.

ஆம், அவள் உதிர்ந்துவிட்டாள்
ஆனால், உதிர்வது முடிவல்ல.

மண்ணோடு கலந்து புது வித்தாகும்
மறுபிறவியை உணர்ந்து தேறிவிட்டாள்.

கவிஞர் ரஸ்னா ரம்ஸான், கண்டி, இலங்கை

# அன்பின் பயணம்

அன்பு என்னும் நதியொன்று
இதயம் தன்னில் பாய்கிறது.
கவலை அனைத்தும் மறைகிறது.
மகிழ்ச்சி இங்கு நிறைகிறது.
பாசம் ஒன்று சேர்கிறது.

இன்பம் எங்கும் பொங்குகிறது.
துன்பம் தூரம் ஓடுகிறது.
நம்பிக்கை ஒளி வீசுகிறது.
நிம்மதி மலரத் தொடங்குகிறது.

காலம் சுழன்று செல்கிறது.
கனவு நிஜமாய் மாறுகிறது.
பூமி அழகாய் மின்னுகிறது.
வானம் எல்லையாகிறது.
புன்னகை என்றும் மலர்கிறது.



கவிஞர் கோ. ஏழுமலை, நத்தாமூர்



அகர முதல

# இயற்கையைப் போற்றுவோம்



அந்த நாள்
வாழ்வின் அருமை
மறந்து போச்சு.

பூமியைச் சாமியாய்
போற்றிய காலமும்
போயாச்சு.

மரம் வைத்து
மழை பெற்ற
அந்த நாள் வாழ்வெல்லாம்
கனவாகிப் போச்சு.

இயற்கையைப் போற்றிய
இனிமையான காலங்கள்
இல்லாமல் போச்சு.

நாளுக்கு நாள்
பெருகிவிட்ட மக்கள் பெருக்கமும்,
இயற்கையை மறந்திட்ட
எந்திரமய வாழ்வில்,
சுயநலமாய் வாழ்வும்
சுருங்கித்தான் போச்சு.

காடுகளும் மலைகளும்
அழிந்து
நகரங்களாய் மாறுது.

ஊரெங்கும்
கான்கிரீட் காடுகளாய்
குடியிருப்புகள் ஆகிப் போச்சு.

கோபம் கொண்ட இயற்கையும்
ஆழிப்பேரலை, பெருவெள்ளம்,
மழை, பூகம்பம், நிலச்சரிவு,
அக்கினியாய் வெயில்,
அமிலமாய் மழை
எனப் பொழியுது.

சுயநல எண்ணத்தால்
துன்பம் வந்து சேர்ந்தாச்சு.
இயற்கையைப் போற்றியே
காக்கும் நல்ல குணம் இருந்தால்,

பூத்துக் குலுங்கும்
பூந்தோட்டமாய் மாறுமே
உலகம் சொர்க்கமாய்.

கவிஞர் ஜேப்பி @ பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# ஆழ்கடல்



அமைதியின் வடிவமாய்த் திகழும் ஆழ்கடலே!
அலைகள் ஓசையோடு கரையில் மோதும்!
ஆழத்தில் அடங்கிடும் மௌனத்தின் சாரம்!
எண்ணற்ற உயிர்கள் உனக்குள் வாழும்!
உன்னாழம் கதிரொளியும் எட்டாத தூரம்!
திமிங்கலமும் சுறாக்களும் நீந்தி விளையாடும்!
சிப்பியில் நன்முத்து உருவாகும் கோலம்!
மேற்பரப்பில் எப்போதும் கொந்தளிக்கும் அலைகள்!
அடிப்பரப்போ காட்டும் நிசப்தக் கலைகள்!
பேராற்றல் கொண்ட பேரதிசயம் நீயானாய்!
நீளமும் ஆழமும் அளவிடல் அரிதாகும்!
ஆயிரம் புயல்கள் உன்னில் உருவாகும்!
ஆனாலும் ஆழ்கடல் அமைதியில் ஆழும்!
புவியின் பெரும்பகுதி உந்தன் ஆட்சி!
இயற்கையின் விந்தைக்கு நீயே சாட்சி!
நீல வானத்தின் நிழலைத் தாங்குகிறாய்!
கார்மேகம் உருவாகக் காரணமாய் அமைகின்றாய்!
பவளப் பாறைகளைக் காக்கும் தாயானாய்!
துள்ளித் திரியும் மீன்கள் பலவகையாய்!
அள்ளிவர வலைவீசும் மீனவர் தொடர்கதையாய்!
பாசிகளின் பலவகைகள் உணவாக, மருந்தாக,
பயன்படும் ஆய்வுகள் தொடருது பலவகையாய்!
நெகிழிக் கழிவுகள் நிலத்திலிருந்து உனையடைய,
பல்லுயிர்கள் மடிந்திடுதே! எண்ணெய்க் கசிவுகளும்
ஆலைக் கழிவுகளும் வளத்தைக் கெடுத்திடுதே!
கவிஞர்களின் கற்பனைக்கு ஊற்றாகத் திகழ்கின்றாய்!
அறிவியலின் அற்புதமே! ஆழ்கடலே வாழ்க!
மனிதகுலம் தழைத்தோங்க நீ என்றும் வாழ்க!

கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி

# மனமுதிர்ச்சி

கூர்வாளாய் அறிவும்
சீர் கொண்ட அகமும்
நீர் வார்த்த குணமும்
பார் போற்றச் செய்யும்.

ஆல் ஒத்த நிறைவும்
பால் போன்ற தெளிவும்
தோல் ஆகிப் போர்த்தும்
கால் பதிக்கச் செய்யும்.

தீயான சொல்லும்
தீய செயலும்
காயங்கள் தராமல்
மாயமாய் மறையும்.

பூவாகப் பாதை
புதுவாசம் வீசும்.
எதுவான போதும்
பதமாகப் பேசும்.

இதழோரப் புன்னகை
இகத்தையே புரியும்.
அகமது முதிர்ச்சி
அர்த்தங்கள் அறியும்.

நிறைகுட நிசப்தம்
நிறைவுக்கே உவமை.
பறைந்திடும் உண்மை
மறை பகரும் மகிமை.



கவிஞர் பஸ்லா பர்ஸான், காத்தான்குடி (இலங்கை)

எதார்த்தமாக தொலைந்ததால்
தூக்கியெறியாத நிம்மதி தருகிறது
பழைய கைப்பை



கவிஞர் அன்னலட்சுமி சரவணன்


## சில ஆம்களும் சில இல்லைகளும்...

உடல்மொழியால் மலர்ச்சியும்,
பேச்சால் உற்சாக வார்த்தைகளும்
உச்சரிக்கப்படுகிறதா?
ஆம் எனில்...
மனது ஆனந்த நர்த்தனம்
ஆடுகிறது என்று பொருள்!
சிறிய சங்கடத்துக்கும்,
வசை மொழிக்கும்
முகம் வாட்டமாகிப்
கண்ணீர் எட்டிப் பார்க்கிறதா?
ஆம் எனில்...
மனம் ரணமாகி
நாளாகிவிட்டது என்று அர்த்தம்!
உடல் வாட்டத்தைப் பார்த்து,
"உடம்பு சரியில்லையா?
ஏதாவது பிரச்சனையா?"
எனக் கேட்கும்போது,
"இல்லை" என்றால்
பகிர விரும்பவில்லை
என்று அர்த்தம்!
கண்களையும் பேச்சையும் கவனித்து,
"ஏதாவது மறைக்கின்றாயா?"
என வினவும்போது,
"இல்லை" என்றால்
பொய்யை நிரூபிக்கும்
முயற்சி என்று பொருள்!
**************************



## அது முடியும் வரை

இன்றைக்கும்
காலம் இருக்கும்.
முக்கியப் பணி
முடிக்க இருக்கும்
நேரத்துக்கும் இடையிலான
பொழுதுகளில்,
ஒருபுறம் தயாராக நேரம்
தேவை என்ற சிந்தனை!
மறுபுறம் வழக்கமாகச் செய்ய
வேண்டிய பிற பணிகளுக்கு இடையிலும்,
நமக்கான நேரங்களிலும்
அதைப்பற்றியே
சிந்தனை வந்து,
அமைதியற்ற மனநிலையில்
தினசரிகளாகி...
சீக்கிரம் முடிக்க வேண்டும்
என்ற யோசனை!
மொத்தத்தில்,
அது முடியும் வரை
பதற்றத்துக்கும்
பஞ்சமில்லை!



சட்டத்தினுள் சிரித்துக்கொண்டிருக்கும் வாப்பாவையே பார்த்து நின்றான் ஆசீம்.

நாளும் பொழுதும் அவருக்கு வெயிலும் மழையும் அவர் மேனியிலேதான் இருக்கும். ஏழ்மை அவரைப் கறுத்துப் போக வைத்தாலும், மனதால் வெறுத்துப் போகாமல் கஷ்டத்தைப் பொறுத்துக்கொண்டு உழைத்தவர் அவர்.

மூத்த மகன் சாலீம், இளைய மகள் நஸீமா, கடைசியாக ஆசீம். மூவரையும் ஒரே போலத்தான் பார்த்தார். ஒருவருக்குப் பென்சில் தேவை என்று சொன்னாலும், மூவருக்கும் மூன்று நிறங்களில் வாங்கி வருவார்.

"உங்களுக்கு என்னப்பா... எதுக்கு மூன்று வாங்கினீங்க? செலவுக்குத் தக்கபடி நடக்காமல் நீங்க வேற இப்படிச் செய்யுறீங்களே!" என்பார் மனைவி சுமையா.

அதற்கு அவர் சிரித்துக்கொண்டே, "நம்ம பிள்ளைங்கதானே... அவங்களுக்காகத்தானே செய்றோம். இப்போது இல்லை என்றாலும் ஒருநாள் எனக்கென்று செய்யும்போது யோசிக்க மாட்டாங்கதானே" என்பார்.

பிள்ளைகள் படித்துக்கொண்டோ விளையாடிக்கொண்டோ இருந்தால், எதுவுமே பேசாமல் அவர்களின் தலையைக் கோதிவிட்டுச் செல்வார். சில நேரங்களில் அருகிலேயே அமைதியாக அமர்ந்து கொள்வார்.

"பசி" என்று பிள்ளைகள் சொன்னாலே போதும்; அவர் எவ்வளவு சோர்வாக இருந்தாலும் உடனே சட்டையை மாட்டிக்கொண்டு கிளம்பிவிடுவார். ஏதோவொரு வேலையைச் செய்துவிட்டு, கையில் நொறுக்குத்தீனிகளோடுதான் வருவார்.

கவிஞர் சஞ்னாஸ் பேகம், முதலைப்பாளி, (இலங்கை)

அப்போதெல்லாம் அன்னை, "இதை வாங்கி வந்ததற்கு இரவுக்குச் சாப்பாடு வாங்கி வந்திருக்கலாமே!" என்று புலம்புவார். அவரோ, "ஹேய்... பிள்ளைங்க கேட்டது இப்போது சாப்பிடத்தானே? இப்போது கொடுத்தால்தானே பிள்ளைகளுக்குத் திருப்தியாக இருக்கும்" என்பார்.

ஆசீம் எட்டாம் வகுப்பு படிக்கும்போது, அவனுடைய வகுப்பு ஆசிரியர் சுற்றுலா (டூர்) செல்லத் தீர்மானித்தார். அவனுக்கும் ஆசையாக இருந்ததால் தன் பெயரைக் கொடுத்துவிட்டு வந்துவிட்டான்.

தந்தையிடம் இதைச் சொன்னபோது, "மூன்று பேரும் போவதென்றால் செல், இல்லையென்றால் வேண்டாமென்று சொல்லிவிடு" என்று அவர் கூறிவிட, அவனுக்கு ஒரே அழுகையாகிவிட்டது. தந்தையின் மீது கோபித்துக்கொண்டு படுத்துவிட்டான். பணம் கட்ட இரண்டு நாட்கள் மட்டுமே இடைவெளி இருந்ததால், என்ன செய்வதென்று தெரியாமல் தவித்தான்.

அன்றிரவு தந்தை சாப்பிடாமல் முன் வராந்தாவில் படுத்திருந்தார். தாய் ஆசீமுக்காகப் பேச முயன்றபோது, எங்கோ வெறித்துப் பார்த்தபடி தந்தை பேசத் தொடங்கினார்:

"நானும் என் உடன்பிறப்புகளுமாக நாலு பேரும் ஒரு ராத்தாவும் (சகோதரி) தான். எப்போதுமே நான் ஆசைப்பட்டுக் கேட்டது எனக்குக் கிடைக்கவே கிடைக்காது. 'நான் கடைசிப் பிள்ளை, எனக்கு எப்போது வேண்டுமானாலும் செய்யலாம்' என்று என் வாப்பா சொல்லுவார். எனக்கும் வயது ஏறிடுச்சு... அப்போதெல்லாம் நான் கேட்டது எதுவுமே நிறைவேறியதே இல்லை. ஏமாற்றமும் ஏக்கமும்தான் மிஞ்சியது. இது அது என்று இல்லை, குட்டியாக ஆசைப்பட்டது கூட என் உடன்பிறப்புகளுக்கு முன்னால் தோற்றுத்தான் போகும். எனக்கும் படிக்க ஆசைதான், ஆனால் நான் கேட்டதை அவர்கள் செய்யக்கூடிய மனநிலையில் என்றுமே இருந்ததில்லை; அதனாலேயே எனக்குப் படிக்கத் தோணவில்லை. ராத்தாவுக்கோ நாநாவுக்கோ (அண்ணன்) எதையாவது வாங்கிக் கொடுத்து, அது காணாமல் போனால் கூட,

கவிஞர் சஞ்னாஸ் பேகம், முதலைப்பாளி, (இலங்கை)

'நான் தான் எடுத்தேன்' என்று என் மீதுதான் அடி விழும்."

அவர் கண்கலங்கியபடி தொடர்ந்தார், "என் பிள்ளைங்க ஒருத்தர் கேட்டாலும் மற்றவர்களுக்கும் சேர்த்தே நான் வாங்கிக் கொடுத்து விடுகிறேன். அவங்க மனசுல எங்கும் ஏக்கம் பதிந்துவிடக் கூடாது என்றுதான். நான் அனுபவித்த வலி என் பிள்ளைகள் யாரும் படக் கூடாது..." அவர் உருக்கமாகப் பேசிக் கொண்டிருந்ததை மறைந்து நின்று பிள்ளைகள் மூவருமே கேட்டுவிட்டார்கள்.

மறுநாள், மூவருமே தந்தையைக் கண்டு புன்னகைத்து ஆளுக்கொரு பக்கமாக அமர்ந்து கொண்டார்கள். தாய் கொடுத்த உணவைப் பிசைந்து, மூவருக்குமே தன் கையால் ஒரு வாய் சோற்றை ஊட்டி விட்டார் தந்தை.
"வாப்பா... நான் டூர் போகல. நீங்க எங்களை எங்கேயாச்சும் கூட்டிட்டுப் போறீங்களா?" என்று கேட்டான் ஆசீம்.

அவரோ புன்னகையுடன் அவன் தலைமுடியைக் கலைத்துவிட்டு, தன் பாக்கெட்டிலிருந்து பணத்தை எடுத்துக் கொடுத்தார். "நீ இப்போது போ தங்கம்... நாநாவும் ராத்தாவும் அவங்களுக்கான நேரத்தில் போகட்டும்" என்றார்.

"ஹை... வாப்பானா வாப்பாதான்!" என்று மற்ற இருவரும் அவரைக் கட்டிக்கொள்ள, ஆசீமோ அந்தப் பண நோட்டுகளையே வெறித்துப் பார்த்தான். அவனுக்கு அழுகைதான் வந்தது. 'காலம் கடந்து நாம் ஏங்கிப் போகக் கூடாது' என்று தந்தை தமக்காக எவ்வளவு யோசித்துச் செய்திருக்கிறார் என்பதை நினைத்து உருகினான்.

படித்து ஆசிரியராக மாறி, வேலை நிமித்தமாக வேறொரு ஊருக்கு வந்திருந்தான் ஆசீம். இப்போது அவனுக்கும் ஒரு மகன் இருக்கிறான். ஒரு தந்தையாகத் தான் மாறினாலும், தன் தந்தையைப் போலத் தங்களால் இருக்க முடியுமா என்று அவன் நினைத்துப் பார்ப்பதுண்டு.

கவிஞர் சஞ்னாஸ் பேகம், முதலைப்பாளி, (இலங்கை)

"என்னங்க... என்னங்க... இங்கே பாருங்க, மாமா வந்திருக்காங்க!" என்று மனைவி சொல்லி முடிப்பதற்குள் அவன் அவசரமாக வெளியில் வந்தான்.

நரைமுடியும் கருமுடியும் சேர்ந்து அவர் தலையை அலங்கரித்திருந்தாலும், அவரிடம் அதே கம்பீரம் குறையாமல் இருப்பதை உணர்ந்தான் ஆசீம். அவரோ வந்த வேகத்தில் தன் மூன்று வயதுப் பேரனைத் தூக்கிக் கொண்டார்.

ஆசீமின் கண்ணில் தேங்கியிருந்த ஏதோவொரு தவிப்பைக் கண்டவர், பேரனுக்கு வாங்கி வந்த விளையாட்டுப் பொருள்களைக் கொடுத்துவிட்டு, மற்றவற்றை மருமகளிடம் கொடுத்தார். பின்னர் மகனைப் பார்த்தார். அவனோ தந்தையின் பார்வையைச் சந்திக்க முடியாமல் தன் பார்வையை எங்கெங்கோ அலைய விட்டுக் கொண்டிருந்தான்.

தந்தை ஒரு புன்னகையோடு தன் கைகளை விரித்தார். ஆசீம் கலங்கிய கண்களோடு, தாய் இறக்கைக்குள் ஒளிரும் குஞ்சைப் போலத் தந்தையின் மார்பில் ஓடி அடங்கிக் கொண்டான். அவரோ மகனின் முதுகை வருடிக்கொடுக்க, அவன் தந்தையின் தோளோடு சாய்ந்து கொண்டான்.

"நாமும் உள்ளே வரவா?" என்று கேட்டபடி, வாசலில் அவனுடைய தாயுடன், சகோதரனும் மனைவியும், சகோதரியும் கணவரும் பிள்ளைகளுமாகப் புன்னகையுடன் நின்றிருந்தார்கள்.

ஒரே கருவில் உருவாகி, தந்தை நெஞ்சில் ஒரே கருவாகக் காக்கப்பட்டு, இன்றும் என்றும் ஒற்றுமையாக வாழும் அந்தப் பாசச் சிறகுகள்!

கவிஞர் சஜ்னாஸ் பேகம், முதலைப்பாளி, (இலங்கை)

## அத்தியாயம் 1

## இரவு பதினொரு மணி (திகில் நவீனம்)




சத்ரபதி சிவாஜி டெர்மினஸ் ரயில் நிலையம். நாகர்கோவில் எக்ஸ்பிரஸ் ரயில் பெருமூச்சு விட்டுக்கொண்டு நிற்க, பயணிகள் அனைவரும் கல்யாண் நிலையத்திலும் தாதர் நிலையத்திலும் இறங்கிவிட்டிருந்தனர். தினேஷ் சி.எஸ்.டி-யில் (CST) இறங்கித் தனியாளாக நடந்தான். இரவு பதினொரு மணியான பிறகும், புறநகர் ரயில் நிலையத்தில் (Local station) மும்பை மக்கள் அவசரம் அவசரமாக ரயிலைப் பிடிக்க ஓடிக்கொண்டிருந்தார்கள். மூடவிருந்த ஒரு பெப்சி கடையின் கடைக்காரனிடம் ஒரு பெப்சி வாங்கிக்கொண்டு, நூறு ரூபாய் நோட்டைக் கொடுத்தான் தினேஷ்.

"சுட்டா தேவ் பாய்" என்றான் கடைக்காரன்.

’திட்டுகிறானா?’ என்று யோசித்தபடியே, "வாட்?" என்று கேட்டான் தினேஷ். "சேன்ஜ் மைடியர்!", "ஹௌ மச்?", "செவன்டி ருபீஸ்."

நூறு ரூபாயைத் திரும்ப வாங்கிக்கொண்டு, தன் பையைத் திறந்து சில்லறைகளை எண்ணிக் கொடுத்துவிட்டு வெளியே வந்தான். வயிறு பசித்தது. மொபைல் போனில் சார்ஜ் தீர்ந்திருந்தது.

அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று தெரியாமலேயே, ரயில் நிலையத்திற்கு வெளியே தென்பட்ட ஒரு டெலிபோன் பூத்தை நோக்கி நடந்தான். பையிலிருந்த டைரியை (டெலிபோன் புத்தகம்) எடுத்துப் புரட்டி, ராஜன் லால் பெயருக்கு எதிரே எழுதியிருந்த எண்களை டயல் செய்தான்.

"ஹலோ, ராஜன் லால் ஸ்பீக்கிங்," என்றது எதிர்முனை.

அத்தியாயம் 1

இரவு பதினொரு மணி

(திகில் நவீனம்)

"நான் தினேஷ், கும்பகோணத்திலிருந்து வந்திருக்கிறேன். வந்திறங்கியதும் போன் பண்ணச் சொன்னீர்களே?" என்றான் அழகான ஆங்கிலத்தில்.

"தினேஷ்... யாரு? எனக்கு தினேஷ் என்று யாருமே தெரியவில்லையே!"

"சார், போன வாரத்தில் எனக்குத் தகவல் கொடுத்திருந்தீர்கள். நான் போனில் பேசியபோது கூட உடனே புறப்பட்டு வரச் சொன்னீர்கள்... நான் மாடலிங் செய்வதற்காக வரவழைக்கப்பட்டவன். 'டைகர் ஜீன்ஸ்' விளம்பரத்தில் வந்த என் மாடலிங் மிகவும் நன்றாக இருந்ததாகக் குறிப்பிட்டிருந்தீர்களே?"

"ஓ... சாரி, மும்பையிலே உனக்கு யாரையாவது தெரியுமா?"

"தூரத்துச் சொந்தக்காரர்கள் இருக்கிறார்கள் சார். ஆனால், நான் யாருடைய முகவரியும் எடுத்து வரவில்லை."

"ஓகே, இப்போது எங்கிருந்து பேசுகிறாய்?"

"சத்ரபதி சிவாஜி டெர்மினஸிற்கு முன்னால் கேபிடல் சினிமா தியேட்டர் இருக்கிறது. அதன் அருகில் உள்ள எஸ்.டி.டி. (STD) டெலிபோன் பூத்திலிருந்து பேசுகிறேன்."

"வெரி குட். பக்கத்திலிருக்கிற காமத் ஹோட்டலில் போய் முதலில் சாப்பிடு. மிகவும் பசியோடு இருப்பாய். சாப்பிட்டு முடிந்ததும் ஒரு டாக்ஸியில் ஏறி, 'புவனேஸ்வர் முக்தா பிலிம்ஸ்' என்று சொல். அலுவலகத்தில் கொண்டு போய் விட்டுவிடுவான்."

"எனக்கு டாக்ஸியில் வரப் பயமாக இருக்கிறது சார்."

"மிஸ்டர் தினேஷ், இது கும்பகோணமோ, கும்மிடிப்பூண்டியோ,

"மிஸ்டர் தினேஷ், இது கும்பகோணமோ, கும்மிடிப்பூண்டியோ, சென்னையோ அல்ல. இங்குள்ள டாக்ஸி டிரைவர்கள் மிகவும் நல்லவர்கள். உங்களிடம் பத்து காசு கூட அதிகமாக வாங்க மாட்டார்கள். விலாசம் தெரியாவிட்டால் கூட, பத்திரமாக விசாரித்துக் கொண்டுபோய் சேர்த்துவிடுவார்கள். நான் அலுவலகத்திற்குப் போன் பண்ணி, இங்கே பக்கத்தில் ஒரு லாட்ஜில் உனக்கு ரூம் புக் பண்ணச் சொல்கிறேன். எங்கள் அலுவலக பியூன் அங்கேதான் படுத்திருப்பான்."

"ஓகே சார்," என்றான் தினேஷ்.




தொடரும்...

கட்டுரை



சுரதா (நவம்பர் 23, 1921 - சூன் 20, 2006) தஞ்சாவூர், தமிழ்நாடில் பிறந்தவர் இயற்பெயர் இராசகோபாலன் தமிழகக் கவிஞரும் எழுத்தாளரும் ஆவார். சுரதாவுக்குச் சுலோசனா என்ற மனைவியும், கல்லாடன் என்ற மகனும் உள்ளனர். இவரின் மருமகள் பெயர் இராசேசுவரி கல்லாடன். பெயரர்கள் இளங்கோவன், இளஞ்செழியன் என இருவர். கவிஞர் பாரதிதாசனிடம் கொண்ட பற்றுதலால் பாரதிதாசனின் இயற்பெயராகிய சுப்புரத்தினம் என்பதின் அடிப்படையில் தன் பெயரை சுப்புரத்தினதாசன் என்று மாற்றிக்கொண்டார். தன் மாற்றுப்பெயரின் சுருக்கமாக சுரதாஎன்னும் பெயரில் பல மரபுக்கவிதைத் தொகுப்புகள் தந்தவர். செய்யுள் மரபு மாறாமல் எழுதிவந்த இவர் உவமைகள் தருவதில் தனிப்புகழ் ஈட்டியவர். இதனால் இவரை உவமைக் கவிஞர்என்று சிறப்பித்துக் கூறுவர்.

### வாழ்க்கைக் குறிப்பு:


சுரதாவின் இயற்பெயர் இராசகோபாலன். தஞ்சை மாவட்டம்பழையனூர் (சிக்கல்) என்னும் ஊரில் பிறந்தவர். பெற்றோர் திருவேங்கடம்-சண்பகம் அம்மையார் ஆவர். பள்ளியிறுதி வகுப்புவரை பயின்றார். சீர்காழி அருணாசல தேசிகர் என்பவரிடம் தமிழ் இலக்கணங்களைக் கற்றார்.

### பாரதிதாசனுடன் தொடர்பு:

1941 சனவரி 14 இல் பாவேந்தர் பாரதிதாசனை முதன்முதல் கண்டு பழகிய சுரதா அவருடன் சிலகாலம் தங்கியிருந்து அவரது கவிதைப் பணிக்குத் துணை நின்றுள்ளார். பாவேந்தர் பாடல்களைப் படியெடுத்தல், அச்சுப் பணிகளைக் கவனித்தல், பாவேந்தரின் நூல் வெளியீட்டிற்குத் துணை நிற்றல் எனப் பல நிலைகளில் பாவேந்தருடன் சுரதாவுக்குத் தொடர்பு

**கவிதை இயற்றல்:**

சுரதாவின் சொல்லடா என்னும் தலைப்பில் அமைந்த கவிதையைப் புதுக்கோட்டையிலிருந்து வெளிவந்த பொன்னி என்னும் இதழ் 1947 ஏப்பிரல் திங்கள் இதழில் வெளியிட்டு இவரைப் பாரதிதாசன் பரம்பரைக் கவிஞராக அறிமுகம் செய்தது.



பாவேந்தரின் புரட்சிக்கவி நாடகம் தந்தை பெரியார், கலைவாணர்முன்னிலையில் நடைபெற்ற பொழுது அந்த நாடகத்தில் அமைச்சர் வேடத்தில் நடித்த பெருமைக்கு உரியவர் சுரதா. அரசவைக் கவிஞராக நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளைஇருந்தபொழுது அவரின் உதவியாளராக இருந்தார்.

**திரைப்பட துறையில்:**


சுரதாவின் கலையுணர்வினைக் கண்ட கு.ச.கிருட்டிணமூர்த்தி என்பவர் இவரைத் திரையுலகத்திற்கு அறிமுகப்படுத்தினார். 1944 ஆம் ஆண்டு மங்கையர்க்கரசி என்னும் திரைப்படத்திற்கு முதன்முதல் உரையாடல் எழுதினார். மிகக் குறைந்த அளவுக்கான பாடல்களையே அவர் எழுதியுள்ளார். சீர்காழி கோவிந்தராஜனின் குரலில் அவரது இரண்டு பாடல்கள், 'அமுதும் தேனும் எதற்கு, நீ அருகினில் இருக்கையிலே எனக்கு', மற்றும் 'ஆடி அடங்கும் வாழ்க்கையடா, ஆறடி நிலமே சொந்தமடா' ஆகியவை. 100 இற்கும் மேற்பட்ட திரைப்படப் பாடல்களை எழுதியுள்ளார். கவிஞர் சுரதாவின் முதற்பாடல் எம்.ஜி.ஆர் நடித்த "'என் தங்கை'" படத்துக்காக எழுதப்பெற்ற "ஆடும் ஊஞ்சலைப் போல: அலை ஆடுதே..!" எனும் பாடலாகும்.

**எழுத்துப்பணி:**

சுரதாவின் முதல் நூல்" சாவின் முத்தம்". இதனை வி.ஆர்.எம்.செட்டியார் என்பவர் 1946 மார்ச்சு மாதம் வெளியிட்டார். 1956 இல் பட்டத்தரசி என்ற சிறு காவிய நூலை வெளியிட்டார். 1954 இல் கலைஞர் கருணாநிதியின் "முரசொலி"இதழில் தொடர்ந்து கவிதைகள் எழுதி வந்தார்.

1955 இல் காவியம் என்ற வார இதழைத் தொடங்கினார். இவ்விதழைத் தொடர்ந்து இலக்கியம் (1958), ஊர்வலம் (1963), விண்மீன் (1964), சுரதா (1988) எனக் கவிதை வளர்ச்சிக்குப் பல இதழ்களை வெளியிட்டார்.

1971 ஆம் ஆண்டு "ஆனந்தவிகடன்"இதழில் சுரதா திரைப்பட நடிகைகளின் அகவாழ்க்கையைப் பற்றி எழுதிய கவிதைகள் பெரும் வரவேற்பைப் பெற்றன. பின்னாளில் இக்கவிதைகள் தொகுக்கப்பட்டு சுவரும் சுண்ணாம்பும்என்னும் பெயரில் நூல் வடிவம் பெற்றுள்ளது (1974).




தமிழ், கவிதை, புகழ் ஆகியவற்றில் ஈடுபாடு கொண்ட புரவலர்கள், ஆர்வலர்கள் ஆகியோரை இணைத்துச் சில வினோதக் கவியரங்கங்களை நடத்துபவராக இருந்தார் சுரதா. படகுக் கவியரங்கம், கப்பல் கவியரங்கம், விமானக் கவியரங்கம் முதலியவை அவை. கவியரங்குகளைக் கொண்டாட்ட நிகழ்வாக மாற்றியதில் அவருக்கு மிகுந்த பங்குண்டு.

பாவேந்தர் தலைமையில் இயங்கிய தமிழ்க்கவிஞர் பெருமன்றத்திற்கு 1966 இல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார்.

**பெற்ற சிறப்புகள்:**

- 1969 இல் தேன்மழை என்ற சுரதாவின் கவிதை நூலுக்குத் தமிழக அரசின் பரிசு கிடைத்தது.
- 1972 இல் தமிழக அரசு சுரதாவுக்குக் கலைமாமணி என்னும் விருது வழங்கிச் சிறப்பித்தது.
- 1978 இல் ம.கோ.இரா. தலைமையில் அமைந்த அரசு பாவேந்தர் பாரதிதாசன் விருது வழங்கிச் சிறப்பித்தது.
- தமிழக அரசு சுரதாவின் நூல்களை நாட்டுடைமையாக்கி அவர் குடும்பத்திற்குப் பத்து இலட்சம் உரூவா பரிவுத்தொகை வழங்கியுள்ளது(2007).
- 1982 இல் சுரதாவின் மணிவிழாவையொட்டி நாவலர் நெடுஞ்செழியன் தலைமையில் நடந்த விழாவில் ரூபா அறுபதாயிரம் பரிசாகத் தரப்பெற்றது.
- 1982 இல் சுரதாவின் கவிதைப் பணிகளைப் பாராட்டிக் குன்றக்குடி அடிகளார் தலைமையில் நடந்த விழாவில் கவியரசர் பட்டம் வழங்கப்பட்டது.
- 1990 இல் கலைஞர் அரசு பாரதிதாசன் விருதினைச் சுரதாவுக்கு வழங்கியது. கேரளாவில் மகாகவி குமரன் ஆசான் விருது சுரதாவுக்குக் கிடைத்தது.
- சுரதாவின் தேன்மழை நூலுக்குத் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் ரூபா ஒரு இலட்சம் இராசராசன் விருதுவழங்கப்பட்டுள்ளது.

- 29.09.2008 இல் சென்னையில் சுரதாவுக்கு நினைவுச்சிலை நிறுவப்பட்டு கலைஞர் கருணாநிதி அவர்களால் திறந்து வைக்கப் பெற்றுள்ளது. விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் இச்சிலை அமைக்கப்பட்டது.

**மறைவு:**

இவர் தன்னுடைய 84ம் வயதில் 2006 சூன் 20 செவ்வாய்க்கிழமை உடல் நலக்குறைவால் காலமானார்.

நாளை நமதே

# பிறப்பு அல்ல உயர்வு

# செயல்தான் சிறப்பு

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை


தொடர்பிற்கு :
9597887847
8870884969




# அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com